# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC.333/2024 | Date: 14.08.2025 |
| Deposition of Witness for | : | **பு.சா.1** | |
| Name | : | **கார்த்திகேயன்** | |

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**குறுக்கு விசாரணை** :-

1) நான் தறி வைத்தும், விவசாயமும் செய்து வருகிறேன். இது தவிர வேறு தொழில் செய்து வருகிறேனா என்றால் வண்டிக்கு கிளினராக செல்வேன். நான் மேற்சொன்ன தொழில் செய்து வருகிறேன் என்று நான் எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்பதையும் நான் எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது பக்கத்து ஊர்காரர். எதிரிக்கும், எனது தந்தைக்கும் ஒரே வயது இருக்கும் என்றால் சரிதான். எதிரியின் குடும்ப உறுப்பினர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், எதிரிக்கு இரு மகன்கள் உள்ளனர். எதிரியின் மகன்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஒரு மகனுக்கு திருமணம் ஆகிவிட்டது. அவருக்கு குழந்தை உள்ளதா என்றால் ஒரு பெண் குழந்தை. நான் எதிரிக்கு கடன் கொடுத்த விவரம் யார் யாருக்கு தெரியும் என்றால் எதிரியின் மனைவிக்கு தெரியும்.

3) எதிரி என்ன காரணத்திற்காக என்னிடம் கடன் கேட்டார் என்றால் எதிரி லாரி வைத்துள்ளதால் அதனை பராமரிப்பதற்கு தேவைப்படுவதாக என்னிடம் கேட்டார்.

எதிரி ஒருமாதமாக கடன் கேட்டுகொண்டிருந்தார், அதன்பிறகு தான் கொடுத்தேன். எதிரி என்னிடம் எந்த தேதியில், எங்கு வைத்து கடன் கேட்டார் என்ற விவரத்தை எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி குடும்ப அவசர செலவு மற்றும் வியாபார செலவுக்காக என்னிடம் கடன் கேட்டார் என்று எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லியிருநதால் அது தவறு என்றால் சரியல்ல.

4) நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் நாடு முழுவதும் கொரானா பரவல் இருந்த சமயத்தில் தொழில் முடங்கி இருந்தது என்றால் இல்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத்த 2021ம் வருட சமயத்தில் என்ன தொழில் செய்தேன் என்றும், எங்கு வசித்து வந்தேன் என்றால் தறி தொழில் மற்றும் வண்டிக்கு கிளினராக சென்று வந்தேன். 2021ம் வருடம் கடைசியாக நான் எப்போது வண்டிக்கு சென்றேன் என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கு நான் 47 நாட்கள் காலதாமதமாக தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 47 நாட்கள் நான் ஊரில் இல்லை என்றால் ஞாபகமில்லை.

5) நான் எதிரிக்கு கடன் கொடுத்த சமயத்தில் எதிரி என்ன தொழில் செய்து வந்தார் என்றால் லாரி வைத்து தொழில் செய்து வந்தார். எதிரி லாரி வைத்து தொழில் செய்து வருவதால் அதன்அடிப்படையில் தான் நான் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் சரிதான்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Karthikeyan